1972 மார்ச் 4]

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, திம்பம் போன்ற பகுதிகளில் இப்படிப்பட்ட ஏராளமான திருட்டுகள் நடப்பதாகப் பொது மக்களிடமிருந்து புகார்கள் சொல்லப்படுகின்றன. அங்கே சரியாகப் பாதுகாப்பு அமைக்கப்படவில்லை என்பது அரசுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, நல்ல முறையில் பாதுகாப்பை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, இந்தாண்டு ஏதாவது வழக்கு தொடரப்பட்டிருக்கிறதா என்ற கேள்விக்குத் தான் இல்லை என்று சொன்னேன். சென்ற ஆண்டு 3 வழக்குகள் பிடிக்கப்பட்டு நீதிமன்றத்தில் இருக்கின்றன.

சிங்கோனா தோட்டத் தொழிலாளர்கள்

* 311 வினா திரு. ஏ. சுப்பிரமணியம் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுக்குச் சொந்தமான சிங்கோனா தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளரின் குறைகள் குறித்து, நீலமலை தோட்டத் தொழிலாளர் சங்கத்தினிடமிருந்து 26—1—1971 தேதியிட்ட விண்ணப்பமொன்று அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அது குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், வால்பாறையில் அரசாங்கத்திற்குச் சொந்தமாகவிருக்கும் சிங்கோனா பிளாண்டேஷனையும், நீலகிரியிலிருக்கும் பிளாண்டேஷனையும் சேர்ந்த தொழிலாளர்கள் கோரிக்கைகளை வைத்து அது சம்பந்தமாக தொழிலாளர் நல அமைச்சர் பேச்சு வார்த்தை நடத்தி ஓரளவு முடிவு செய்திருக்கிறார்கள். அது விவரம் அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, 26—1—1971-ல் அரசுக்கு வந்ததா என்று கேட்டதற்கு வரவில்லை என்று சொன்னேன். 26—9—1971 இல் சிங்கோனா டைரக்டருக்கு

விண்ணப்பம் அனுப்பியிருக்கிறார்கள். அதில் பல்வேறு கோரிக்கைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதில் சில கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, சம்பள உயர்வு, 5—7—1967-ல் ஒரு தடவையும் 1—1—1960-ல் ஒரு தடவையும், 2—9—1971 இல் ஒரு தடவையும் ஆக 3 தடவைகள் சம்பள விகிதத்தை உயர்த்திக் கொடுத்திருக்கிறோம். இன்னும் கோரிக்கைகள் இருக்கின்றன. அவைகளைப் பரிசீலிக்கிறோம்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, நீலமலையில் இருக்கும் சிங்கோனா தோட்டங்களில் உள்ள தொழிலாளர்களின் குறைகளை அரசுக்குப் பல தடவைகள் சொல்லியும் ஒரு முடிவு காண முடியவில்லை. அங்கிருக்கும் தொழிலாளர்கள் தனிப்பட்ட முதலாளிகளின் தோட்டங்களில் கொடுக்கப்படும் கூலியைவிடக் குறைந்த கூலிக்குப் பணியாற்றுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அதைப்பற்றி யோசிக்க அரசு ஏதாவது முயற்சி எடுத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, நான் தெளிவாகச் சொன்னேன். தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் 3 தடவை தொழிலாளர் பிரதிநிதிகளை அழைத்து வந்தார். 3 தடவையும் சம்பளம் உயர்த்திக் கொடுக்கப்பட்டது. மினிமம் வேஜஸ் அக்ட் என்று சொல்லியிருக்கிறார்கள். It is under the consideration of the Government.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், பொதுவாக அரசாங்கத்திலே வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு அதிருப்தி அதிகமாக இருக்கிறது. முதலில் இவர்கள் தொழிலாளர்களைச் சிறப்பாக நடத்தினால்தானே அடுத்தவர்களையும் அப்படி நடத்திச் செல்ல முடியும். அவர்களுடைய குறைகள் என்னவென்று பார்த்து அவைகளைத் துரிதமாகத் தீர்க்க தனிக்குழு அமைத்து, அந்தக் குழுவில் தொழிலாளர்கள் மத்தியில் நன்கு பணிபுரியும் சட்டசபை உறுப்பினர்களுக்கு இடம் அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, இந்தப் பிரச்னையைப் பொறுத்தவரையில், இந்தக் கேள்வியைப் பொறுத்த வரையில் அவர்கள் கேட்கும் கேள்வி இதில் வராது என்று கருதுகிறேன்.

Tamil Nadu Transport Department

* 312 Q.—THIRU E. S. THYAGARAJAN : Will the Hon. the Minister for Transport be pleased to state the number of posts of Joint Directors in the State Transport Department that were sanctioned after nationalising the routes of 75 miles and the number that have been filled up till now?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறையில் இணை இயக்குநர் பதவிகள் நான்கு ஒப்பளிக்கப்பட்டு, அப்பதவிகள் நான்கும் நிரப்பப்பட்டுள்ளன.

DR. H. V. HANDE : Sir, may I know from the Hon. Minister whether there is any programme on behalf of the Government to see to it that most of the transport organisations run efficiently. After the recent bifurcation into four zones, whether any improvement has been noticed and whether the Government have got any schemes to improve their efficiency and if so, the details?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இவை ஏற்கனவே உள்ள அரசாங்க போக்குவரத்துத் துறையை 4 பிரிவு களாக தமிழ்நாடு முழுவதும் பிரித்து நிர்வாக வசதிக்காக இதைத் சீர்திருத்தம் செய்து அமல் படுத்தப்பட்டு வந்ததைப் பற்றிய ஒரு கேள்வியாகும். இப்பொழுது நாட்டுடைமை யாக்கும் திட்டத்தின்மூலம் நாம் மேற்கொண்டிருக்கிற மூன்று பகுதிகளிலேயுள்ள கம்பெனிகளை அரசுடைமை கம்பெனிகளாக ஆக்கி இப்பொழுது வேறு நிர்வாகத்தை உண்டாக்குகிறோம். எடுத்துக்கொண்டிருக்கும் நிர்வாகத்தைத் திறமையாக நடத்திய பிறகு ஆங்காங்கு அந்தந்தப் பகுதிகளிலே உள்ள அரசாங்கப் போக்குவரத்து மாவட்ட வழித்தடங்களை இப்பொழுது உருவாக் கப்பட்டிருக்கும் போக்குவரத்துக் கழகமே ஏற்று நடத்த வாய்ப் புகள் உண்டா என்பதைப்பற்றி விரைவிலே பரிசீலிக்கப்படும்.

* 313 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether the State Government has asked the Special Officer (Comprehensive Bus Study) Directorate of Technical Education, Madras, to submit a report for the improvement of the efficiency of the Tamil Nadu Transport Department;

(b) if so, whether the Special Officer has submitted the report : and

(c) the details thereof?